## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

## அசல் வழக்கு எண். 60/2019

PW1 – திரு.மாரிமுத்து நாள். 11.03.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை தொடச்சி**

1. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கட்டுப்பட்ட மொத்த சொத்திற்கு தான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தில் எந்த பக்கம் எனது வீடு உள்ளது என்றால் தெற்கு பக்கம் உள்ளது. எனது வீட்டிற்கு எந்த பக்கம் எனது சகோதரர் வீடு உள்ளது என்றால் மேற்கு பக்கம். நான் எனது பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் தாவா சொத்தில் வீடு உள்ள விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் ஞாபகமில்லை. எனது வீட்டை சுற்றி வேலி அமைத்து உள்ளேன் என்றால் சரிதான். வேலி மற்றும் வீடு உள்ள பகுதி எத்தனை செண்ட் இருக்கும் என்றால் 10 செண்ட் இருக்கும். எனது வீட்டிற்கும் வட புறம் உள்ள காலி இடம் தொடர்பாகத்தான் எனக்கும் பிரதிவாதிகளுக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி காலியிடமானது 7 செண்ட் என்றால் சரியல்ல 1 செண்ட்.

2. நான் குடியிருக்கும் வீட்டிற்கு கிழக்கு பக்கம் சிலம்பன் சொத்து உள்ளது என சொல்லியுள்ளேன் என்றும் மேற்படி சிலம்பன் என்பவர் எனது தகப்பனார் என்றால் சரிதான். எனது பூர்விகம் எந்த ஊர் என்றால் கல்லூர் கிராமம். மேற்படி

எனது தகப்பனார் எப்பொழுது இறந்தார் என்றால் 2006 ம் வருடம். என் உடன்பிறந்தவர்கள் எத்தனை நபர் என்றால் 2 அண்ணன், 2 அக்கா ஆவார்கள். எனது சகோதரர் மாணிக்கம் என்ன வேலை செய்தார் என்றால் தெரியாது. எனது சகோதரருடன் பேச்சு வார்த்தையில் இருந்தேனா என்றால் அவருக்கு திருமணம் நடைபெற்றதிலிருந்து பேச்சு வார்த்தையில் இல்லை. எனக்கும் எனது சகோரர்களும் திருமணத்திற்கு முன்பு வரை பூர்விக வீட்டில் ஒன்றாக குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். ஒரே குடும்பமாக இருந்த போது எனது சகோரர் மாணிக்கம் என்ன வேலை செய்தார் என்று தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி மாணிக்கம் சென்னையில் வேலை செய்தார் என்றால் சரிதான்.

3. எனது சகோதரர் திருமலை என்பவர் வெளிநாடு போக்குவரத்தாக இருந்தார் என்றால் ஒரு முறை மட்டும் சென்று வந்தார். எத்தனை வருடங்களுக்கு முன்னர் அவர் வெளிநாடு சென்றார் என்றால் ஞாபகமில்லை. எனது சகோதரர் திருமலை எனது வீட்டிற்கு மேற்கு பக்கத்தில் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறார் என்றால் எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் இல்லை எனது வீட்டின் மேற்கு பக்கம் 10 வருடங்களாக குடியிருந்து வருகிறார். மேற்படி திருமலை குடியிருந்து வரும் வீடானது அவரது பாகத்திற்கு உட்பட்டது என்றால் சரியல்ல எனது அனுமதியின் பெயரில் குடியிருந்து வருகிறார். திருமலை குடியிருந்து வரும் பகுதிக்கு வீட்டு வரி, மின் இணைப்பு அவர் பெயரில் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

4. எனது தகப்பனாருக்கு பாத்தியமான பூர்விக சொத்துக்கள் எவ்வளவு என்றால் 2 ஏக்கர் ஆகும். எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களுக்கு எனது தகப்பனார் பெயருக்கு பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 2 ஏக்கரில் நான் எவ்வளவு சொத்தில் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சுமார் 3/4 ஏக்கரில் விவசாயம் செய்து வருகிறேன். எனது தகப்பனார் சொத்துக்களை பொறுத்து நானும், எனது உடன் பிறந்தவர்களும்

பாகப்பிரிவினை செய்து கொண்டோமா என்றால் செய்து கொண்டோம். எப்பொழுது பாகப்பிரிவினை செய்து கொண்டோம் என்றால் சுமார் 2000 ம் வருடத்தில்.

5. மேற்படி பாகப்பிரிவினை தொடர்பாக ஆவணம் எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்படவில்லை. மேற்படி பாகப்பிரிவினை அடிப்படையில் வருவாய் ஆவணங்கள் மாற்றப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி தகப்பனார் பெயரில் உள்ள சொத்துக்களுக்கு பயிர் காப்பீடு யார் செய்வது என்றால் பயிர் காப்பீடு எதுவும் செய்யப்படவில்லை. வெள்ளக் காலங்களில் சேதம் ஏற்படும் போது அரசாங்கத்தில் இருந்து நஷ்ட ஈடு கொடுக்கப்பட்டது என்றால் அதைப் பற்றி தெரியாது. மேற்சொன்ன 3/4 ஏக்கரில் யார் விவசாயம் செய்து வருகிறார்கள் என்றால் நான் தான் செய்து வருகிறேன். எனது மூத்த சகோதரர் மாணிக்கத்திற்கு எபப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் தெரியாது. எனக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் 2004 ம் வருடம் நடைபெற்றது. எனது திருமணத்திற்கு முன்பு எனது தகப்பனார் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை வாரிசுகளுக்கு பிரித்து தரவில்லை என்றால் சரிதான். எனது சகோதரிகளுக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் அப்பொழுது நான் சிறுவன் என்பதால் தெரியாது.

6. நான் சென்னையில் எவ்வளவு காலமாக என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் 10 வருட காலங்களாக சென்னையில் வேலை பார்த்து வருகிறேன் கடந்த 2 வருடங்களாக டெக்னிக்கல் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். திருமணத்திற்கு முன்பு வரை எனது சம்பாயத்தை எனது பெற்றோரிடம் கொடுத்து வந்தேனா என்றால் கொடுக்கவில்லை. நான் 10 வருடங்களுக்கு முன்பு எங்கு வேலை பார்த்தேன் என்றால் மதுரையில். இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பபட்டுள்ள எதிர்வழக்குரையில் உள்ள விவரங்களை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. எனது நிரூபண வாக்குமூலத்தில் பிரதிவாதிகள் பொய்யான சங்கதிகளை கூறி

எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என சொல்லியுள்ளது பொய் என்றால் குறிப்பிட்ட விவரங்கள் மட்டும் தெரியும். **(கேள்விக்கு சாட்சி பதட்டத்துடன் பதில் அளித்தார் ) .**

7. எனது சகோதரர் திருமலை என்ன வேலை செய்து வருகிறார் என்றால் விவசாம் செய்து வருகிறார்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**